**கெபிதிகொல்லாவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள 238.5 ஏக்கர் பரப்பளவுடைய 59 மயானங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 23,311,116 பெறுமதியான சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் 2014 நவெம்பர் மாதத்தில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 648 கல்வனைசுக் குழாய்களின் பெறுமதி ரூபா 717,428 நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 35,451,716 கூட்டுத்தொகையான காணிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,061,626 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,453,108 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

(அ) 2015 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 500,000 பெறுமதியான முத்திரைக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீதிமன்ற தண்டப்பணப் பதிவேட்டிற்கு அமைய 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரை கிடைக்க வேண்டிய ரூபா 450,145 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,410,491 பெறுமதியான செலுத்த வேண்டிய தரப்பினர் யார் என உறுதியாக இனங்காணப்படாத 04 கடன் மீதிகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 238.5 ஏக்கர் பரப்புடைய 59 மயானங்கள் தொடர்பாக உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் 2006 நவெம்பர் 14 ஆம் திகதிய PL/07/01/53 இலக்க மாகாண கட்டுப்பாடு மீளமைப்பு சுற்றறிக்கையின் 9 ஆம் இலக்க முன்மொழிவு மற்றும் 02 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் தொடர்ந்து செயற்படுத்தப்படும் வீதி பராமரிப்பு முறை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திறைசேரி செயலாளரின் 2002 நவெம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்க திறைச்சேறிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணணி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக புறம்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பராமரிக்கப்படவில்லை.

(உ) சபையினால் பயன்படுத்தப்பட்ட பழைய காரியாலயக் கட்டிடம் எழுத்து மூல ஒப்பந்தம் ஒன்று இன்றி வெளித்தரப்பினருக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

(அ) ரூபா 170,000 தொகை பெறுமதியான டிரக்டர் ஒன்று (ஹீரோபேன்) பயன்படுத்தப்படாமல் அகற்றப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரிசி மாவுடன் அண்மித்த பேக்கரி உணவு உற்பத்திக்காக ரூபா 640,000 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் வட மத்திய மாகாண பிரதான அமைச்சரினால் 2007 ஆம் ஆண்டில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அவ்வியந்திரங்களைப் பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எய்துவதற்காக 2016 மார்ச் மாதம் வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்